## இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தென் கிழக்குப் பல்கழைக்கழகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,498,750,862 கூட்டுமொத்தத் தொகையான ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதியானது பதிவேட்டுப் பெறுமதியை அடிப்படையாக கொண்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அச்சொத்துக்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களளச் சமர்ப்பித்தல் முறைகளை உள்ளடக்கிய அரசாங்க மானியங்களிற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையை பல்கலைக்கழகம் வெளிப்படுதியிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றில் ரூபா 763,843 தொகையான பின்வரும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| விபரங்கள் | தொகை |
|---|---|
| | ரூபா |
| கூலிகளும் போக்குவரத்தும் | 112,910 |
| புதினப் பத்திரிகைச் செலவினம் | 47,990 |
| தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் | 603,943 |
| | 763,843 |

(ஆ) காசுப்பய்ச்சல் கூற்றில் நிலையான சொத்துக்களின் காசுக் கொள்வனவுகளாக ரூபா 219,364,484 தொகையும் பெறப்பட்ட மூலதன மானியமாக ரூபா 220,300,000 தொகையும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 24,300,000 பெறுமதியான நன்கொடையளிக்கப்பட்ட வாகனங்கள் மேற்குறிப்பிடப்பட்ட தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிக் கூற்றுக்களில் ரூபா 64,345,984 ஆன பெறுமானத் தேய்வு காட்டப்பட்டிருந்த அதேநேரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 60,466,003 ஆக பெறுமானத் தேய்வு குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகவே, பெறுமானத் தேய்வானது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,879,981 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 2,499,730 தொகையான கருத்தரங்கிற்கான மீண்டெழும் தன்மையான செலவினம் மூலதன செலவினமாக தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) ரூபா 8,000,000 தொகையான நிலையான சொத்துக்களின் மீளெடுப்பு ஏனைய வருமானத்திற்கு செலவுவைக்கப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 8,000,000 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஊ) வியாபார நிர்வாக முதுமானி (எம்பிஏ) நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வெளிவாரி பட்டப்படிப்பு மற்றும் தொழில்ரீதியான கற்ப்பித்தல் நிலையம் என்பன (சீஈடிபிஎல்) பல்கலைக்கழகத்தில் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அலகுகளாக உள்ளன. அந்த அலகுகள் 2012 இல் பின்வரும் மிகைகளை உழைத்திருந்தன.

| | **பாடநெறிக் கட்டணங்கள்** | **செலவிம்** | **மிகைகள்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| எம்பிர நிகழ்ச்சித்திட்டம் | 7,435,810 | 4,779,437 | 2,656,373 |
| சீஈடிபிஎல் | 3,343,145 | 4,714,654 | (1,280,509) |
| | 10,869,955 | 9,494,091 | 1,375,864 |

பல்கலைக்கழகம் 2012 இல் நிதிச் செயலாற்றல் கூற்றில் மேற்குறிப்பிட்ட பாடநெறிக் கட்டணம் மற்றும் செலவினம் என்பவற்றினைக் காட்டியிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இடர் கடன்கள்

மூன்று உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டு நிலுவையாகவிருக்கின்ற ரூபா 293,123 தொகையான இடர் கடன்கள் நீண்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்கய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

| **விடயங்களின் விபரங்கள்** | **பாதிக்கப்பட்ட கணக்குகளின் பெறுமதி** | **கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்** |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடம் | 440,304,744 | மதிப்பீட்டு அறிக்கை |

| | | |
|---|---|---|
| தளபாடங்கள் | 89,549,319 | பெறுமதியை காட்டுகின்ற மெய்மையாய்வு அறிக்கை |
| புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 105,022,133 | மெய்மையாய்வு அறிக்கை மற்றும் பட்டோலைகள் |
| உபகரணங்கள் | 301,314,501 | மெய்மையாய்வு அறிக்கைகள் |
| பிணை வைப்புக்கள் | 2,111,418 | உறுதிப்படுத்தல்கள் |
| கலாநிதி பட்டம் / முதுமானி பட்டம் | 3,278,422 | விரிவான பட்டோலைகள் |
| வாகனத் திருத்தங்கள் | 2,309,124 | உரிய ஆவணங்கள் அல்லது கோவைகள் |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கோவை | |
| (i) அத்தியாயம் X இன் 23 ஆம் பிரிவு | விரிவுரையாளர்களிற்கு வழங்கப்பட்ட விடுமுறை தொடர்பான விடுமுறைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) அத்தியாயம் X இன் 20.6 ஆம் பிரிவு | கொடுப்பனவு இல்லாத சகல விடுமுறைகளும் படிவம் பொது 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) அத்தியாயம் XXVII இன் 3:1 ஆம் பிரிவு | வருகைதரும் மற்றும் வெளிச்செல்லும் நேரத்தைப் பதிவதற்கு பல்கலைக்கழகத்தின் கல்விசார் உத்தியோகத்தர் தொடர்பில் வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவை – அத்தியாயம் XIX இன் 05 ஆம் பிரிவு | அரசாங்க விடுதிகளில் வசிப்போருக்கான வாடகை வசிப்போரின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட வேண்டும். ஆனால், வசிப்போர்களின் சம்பளங்களிலிருந்து எவ்வித வாடகையும் கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணங்கள்<br>------------------------------- | |
| | (i) 1647(பீ) | ஆரம்பத்திலிருந்து பல்கலைக்கழகத்தின் வாகனங்கள் மீது மெய்மையாய்வுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| | (ii) 702 (3) | ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட இருபது வாகனங்கள் மீதான எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பொது முயற்சிள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 10 ஆந் திகதிய பீஈ/1/174/11(பீ) ஆம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் உத்தியோகத்தர்களிற்கு ரூபா 310,906 |

| | |
|---|---|
| இலக்க கடிதம் | தொகையான மொழிப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஊ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2005 சனவரி 31 ஆந் திகதிய 856 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.3 மற்றும் 6.4 ஆம் பந்திகள் | பல்கலைக்கழகமானது குழு ஒன்றினை நியமிக்க வேண்டியதுடன் மஹாபொல மற்றும் உதவிப் பணங்கள் கொடுப்பனவு தொடர்பில் மாதாந்த செயலாற்றல் அறிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுக்க முன்னர் ரூபா 442,113,071 பற்றாக்குறையை விளைவித்திருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த பற்றாக்குறை ரூபா 398,504,487 ஆகும். மீண்டெழும் செலவினத்திற்காக பெறப்பட்ட ரூபா 367,417,850 தொகையான அரசாங்க மானியம் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையை ரூபா 74,695,221 ஆக குறைத்திருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 341,832,350 ஆன அசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் அந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 56,672,137 ஆக குறைந்தமையானது நிதிசார் விளைவுகளில் ரூபா 18,023,084 ஆல் மேலும் வீழ்ச்சியைக் சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) வருமானம் மற்றும் செலவினம்

| விபரங்கள் | 2012 | 2011 | அதிகரிப்பு / (பற்றாக்குறை) | அதிகரிப்பு/ (பற்றாக்குறை) இன் சதவீதம் |
|---|---|---|---|---|
| ----------------- | ----------- | ----------- | ------------ | ------------ |

| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) | % |
|---|---|---|---|---|
| வருமானம் | 13,743 | 9,172 | 4,571 | 50 |
| செலவினம் | 455,856 | 407,676 | (48,180) | (12) |
| பற்றாக்குறை | 442,113 | 398,504 | (43,609) | (11) |
| அரசாங்க மானியங்கள் | 367,418 | 341,832 | 25,586 | 07 |
| அரசாங்க மானியங்களின் பின்னர் மிகை அதிகரிப்பு /(பற்றாக்குறை) | 74,695 | 56,672 | (18,023) | (32) |
| | ===== | ===== | ====== | ===== |

**(ஆ) நிதி நிலைமை**

| விபரங்கள் | 2012 | 2011 | அதிகரிப்பு / (பற்றாக்குறை) | அதிகரிப்பு/ (பற்றாக்குறை) இன் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா(000) | ரூபா (000) | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 9,473 | 22,314 | (12,841) | 58 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 62,191 | 85,723 | (23,532) | (27) |
| காசு மற்றும் காசிற்கு சமமானவை | 3,330 | 390 | 2,940 | 754 |
| ஆராய்ச்சி மானியங்களின் அடிப்படையில் செலுத்தப்பட்ட முற்பணங்கள் | 292 | 292 | - | 0 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | - | | | |
| மூலதன மானியங்கள் (செலவழிக்கப்படாதது) | 936 | - | 936 | |

| | | | | |
|---|---|---|---|---|
| வேறு நிதிகள் | 3,284 | 2,628 | 656 | 25 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் குறித்த சில கல்வி நடவடிக்கைகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| நடாத்தப்படபட்ட பட்ட பாடநெறிகள் | பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2012 | 2011 |
| பிரயோக விஞ்ஞானம் | இல்லை | 184 | 43 | 15 |
| கலை மற்றும் கலாச்சரம் | இல்லை | 118 | 179 | 02 |
| முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் | இல்லை | 274 | 106 | 01 |
| இஸ்லாம் மற்றும் அரபு | இல்லை | 243 | 88 | 04 |
| **மொத்தம்** | - | 819 | 416 | 22 |

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பட்டம் பெறுவோர் மொத்த எண்ணிக்கை 1790 ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிரந்தர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 105 ஆக இருந்ததுடன் ஒரு விரிவுரையாளருக்கான மாணவர்கள் 19 அக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 13,531,550 தொகையான மஹாபொல புலமைப்பரிசில்கள் 776 மாணவர்களிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 16,286,300 தொகையான உதவிப் பணங்கள் 1,096 மாணவர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் 505 ஆண் மாணவர்கள் மற்றும் 918 பெண் மாணவர்களிற்கு விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. ஏற்பட்ட மொத்த விடுதிச் செலவினம் ரூபா 4,028,152 ஆக இருந்தது.

(உ) பெறுமானத்தேய்வு இல்லாத மொத்தச் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 391,510,177 ஆக இருந்ததுடன் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2034 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 192,483 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டு ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 196,150 ஆக இருந்தது.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐக்கிய இராச்சிய நொத்தும்பிரிய பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப்படிப்பினைக் கற்பதற்கு 2006 செப்தெம்பர் 15 தொடக்கம் 2010 சனவரி 10 வரை ஒரு ஆங்கில விரிவுரையாளருக்கு கல்வி விடுமுறை வழங்கப்பட்டது. அவருடைய கல்வி விடுமுறை முடிவடைந்த பின்னர், 03 ஆண்டுகள் கடந்த பின்னரும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, விரிவுரையாளர் பிணைமுறி மற்றும் உடன்படிக்கையை மீறியிருந்ததார் என கணக்காய்வில் கருதப்பட்டிருந்தது. பிணைமுறித் தொகை ரூபா 8,942,758 ஆக இருந்தது.

(ஆ) இந்தியா, மெற்றாஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பினைக் கற்பதற்காக 2008 யூலை 26 தொடக்கம் 2009 யூலை 25 வரையான ஒரு ஆண்டிற்கு இன்னொரு சிரேஸ்ட விரிவுரையாளர் தரம்- II இற்கு கல்வி விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. ஆனால், விரிவுரையாளர் அவருடைய கல்வியை கைவிட்டிருந்தார். பிணை மற்றும் உடன்படிக்கையை மீறியமை கரணமாக ரூபா 1,035,321 ஆன மொத்த பிணைத் தொகையை திரும்பச் செலுத்தவதற்கு 2011 திசெம்பர் 13 இல் நடைபெற்ற 49 ஆவது விடுமுறை மற்றும் பரிசுவழங்கல் குழு (எல்ஏசீ) கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்ட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியான 2013 பெப்ரவரி 22 வரை இத்தொகையை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்திட்டத்தில் தாமதங்கள்**

---------------------------------------------------

பல்கலைக்கழகத்தின் பிரதான திட்டம் தயாரிப்பதற்காக 2006 ஆம் ஆண்டின் போது ஆலோசனை சேவையாக ரூபா 16,866,550 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய பிரதான திட்டம் 2013 ஏப்ரல் 30 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 முற்பணங்களின் தீர்ப்பனவு**

-----------------------------------------

(அ) குறித்த நோக்கங்களிற்கான முற்ணமாக ரூபா 88,975 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அம்முற்பணஙகள் குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தாமல் கருத்திற்கொள்ளக்கூடிய தாமதத்துடன் முழுவதும் காசாக தீர்க்கப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 878,100 தொகையான நான்கு முற்பணங்கள் அவர்களால் எந்த நோக்கங்களிற்காக பெற்றுக்கொண்டிருந்தார்களோ அந்நோக்கங்களை பூர்த்தி செய்யாமல் கருத்திற்கொள்ளக்கூடிய தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தன.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

-------------------------------------------------------------------------------

(i) உப வேந்தரின் தனிப்பட்ட வதிவிடத்திற்கு வர்ணம் பூசுதல் வேலைகளிற்காக ரூபா 118,460 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஏவ்வாறாயினும், இக்கொடுப்பனவு முறையான அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டிருந்தது.

(ii) உப வேந்தரின் தனிப்பட்ட வதிவிடத்திற்கு முறையான அதிகாரம் இல்லாமல் 2012 ஆம் ஆண்டிற்காக மின்சாரம் மற்றும் தண்ணீர் பட்டியல்களாக ரூபா 218,481 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு**

---------------------------------------------------------------------

(அ) கொள்வனவு முறைமை

----------------------------------------

கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்பக்குழுவின் (ரீஈஓ) கூட்டக் குறிப்புகளைப் பதிவதற்கு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. பதிலாக குறிப்புகள் சம்பந்தப்பட்ட கொள்வனவுக் கோவையில் தனித்தனி தாள்களாக

வைக்கப்பட்டிருந்தன. ஆவணங்கள் மற்றும் தகவல்கள் பின்னர் தற்காலிகமாக்குவதற்கு கட்டாயமாக விழிவகுக்கும். கோள்வனவு வழிகாட்டலின் 2.11.3 ஆம் பிரிவிலுள்ள (என்பிஏ சுற்றறிக்கை இல 08) ஏற்பாடுகள் முறைப்படி கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரும்பு மேசைகள் மற்றும் கதிரைகளின் கொள்வனவு

(i) 2012 பெப்ரவரி 28 இல் இரும்பு மேசைகள் மற்றும் கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,257,120 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2006 கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் 1998 ஒக்தோபர் 20 ஆந்திகதிய 365 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் படி திறந்த கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.
- நான்கு நேரடியாக கையளிக்கப்பட்ட கேள்விகள் மாத்திரம் பெறப்பட்டிருந்தது.
- பெறுகின்ற ஆவணங்களிற்கான பதிவுகள் உள்வரும் பதிவேட்டில் செய்யப்பட்டிருக்கவில்லை.
- மதிப்பாய்வு அறிக்கை மற்றும் மதிப்பாய்வுக் குழுவிற்கான நியமனக் கடிதங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.
- புதினப்பத்திரிகைகள் மற்றும் அறிவிப்பு பலகைகளில் கேள்வி விளம்பரப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், இந்தக் கேள்வி வேண்டப்பட்டவாறு விளம்பரப்டுத்தப்பட்டிருக்கவில்லை.
- கேள்விச் சபைக் குறிப்புகளின்படி, மூன்று உறுப்பினர்கள் கேள்விச்சபையில் பங்குபற்றியிருந்தனர். எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர் அதே திகதியில் கடமையில் இருக்கவில்லை.
- பெறுமதி சேர் வரி விபரங்கள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

## 3.7 ஆராய்ச்சி மானியங்கள்

(அ) ஆராய்ச்சிப் படிகள் பெறுவதிலுள்ள நடைமுறை

(i) 86 உத்தியோகத்தர்கள் ஆராய்ச்சிப் படிகள் பெற்றிருந்த போதிலும் பதினொரு உத்தியோகத்தர்கள் மாத்திரம் ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தனர்.

(ii) எந்தவொரு பிரேரணையும் இல்லாமல் ஆராய்ச்சிப்படிகள் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ஒரு ஆராய்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றிருந்தது. இது தொடர்பாக ஆராய்ச்சிப் படிகள் பெற்றிருந்த பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்களால் இந்த ஆராய்ச்சி வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு பல்கலைக்கழக முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத ஆராய்ச்சி மானியங்கள்

ஆராய்ச்சிகளிற்காக 13 பல்கலைக்கழக ஆசிரியர்களிற்கு ரூபா 291,869 தொகையான ஆராய்ச்சி மானியங்கள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இந்த ஆராய்ச்சி மானியங்கள் நீண்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.7 கொடுப்பனவுகள்

(அ) வெகுமானக் கொடுப்பனவுகள் ரூபா 1,111,036

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2012 ஆம் ஆண்டிற்காக வெளிவாரி பட்டப்படிப்பு மற்றும் வெளிவாரிப் பாடநெறிகள் 2012 சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்திற்காக ஈடிஈசீ இனுடைய கணக்கிலிருந்து 25 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1,111,036 தொகையான வெகுமானக்

கொடுப்பவுகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வெகுமானம் செலுத்துவதற்கு சுற்றறிக்கைகள், விதிகள் மற்றும் பிரமாணங்களில் எவ்வித ஏற்பாடுகளும் இருக்கவில்லை.

(ஆ) வாடகைக் கட்டணங்களின் கொடுப்பனவு ரூபா 98,800

2012 பெப்ரவரி 15 தொடக்கம் 2012 மார்ச் 12 வரை வெளிவாரி பட்டப்படிப்பு பரீட்சை வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் வாடகைக்காக ரூபா 98,800 தொகையான வாடகைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் பாதுகாப்பு அலுவலகத்தில் பேணப்பட்ட பதிவேடுகளின்படி, மேற்கூறப்பட்ட காலத்தில் பல்கலைக்கழக வளவில் மேற்குறிப்பிட்ட வாடகை வாகனங்கள் நுழைந்திருந்தன என்பதற்கு எவ்வித பதிவுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அறவிடப்படாத மின்சாரக் கட்டணங்கள்

பல்கலைக்கழக நிதிகளிலிருந்து இலங்கை மின்சார சபைக்கு 22 விடுதிகளிற்கான ரூபா 446,571 தொகையான மின்சாரக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவின்படி சம்பந்தப்பட்ட குடியிருப்பாளரிடமிருந்து மின்சாரக் கட்டணங்களை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 நூலக நிர்வாகம்

எல்லைகளை வரையறுக்காமல் பல புத்தகங்கள் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களால் பெறப்பட்டிருந்ததுடன் அப்புத்தகங்கள் ஏறத்தாழ 7 ஆண்டு காலமாக நூலகத்திற்கு திருப்பி வழங்கப்பட்டிருக்கவில்லை. எல்லைகள் வரையறுக்காமல் புத்தகம் பெறல் மற்றும் உரிய நேரத்தில் அப்புத்தகங்களை திருப்பி செலுத்தாமை போன்ற காரணங்களால் புத்தகங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை மாணவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தரிகள் இழந்திருந்தனர்.

## 3.10 பணிப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளரின் நியமனம்

2010 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 935 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி, பணிப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளக மற்றும் வெளியக விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கோருவதன் ஊடாக சபையால் ஈடிஈசீ பிரிவிற்கு நியமிக்கப்பட வேண்டியதுடன் தெரிவானது சபையால் நியமிக்கப்பட்ட குழுவென்றால் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், சபையானது மேற்குறிப்பிட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு முரணாக பணிப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை நியமித்திருந்தது.

## 4. கணக்களித்தகைமை மற்றும் நல்ல ஆளுகை

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2012 – 2016 காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் இது சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னைய மூன்று ஆண்டு செயற்பாட்டு விளைவுகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 ஆம் ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, இலக்குகளை எய்தாமை, மிகையான செலவினம் மற்றும் கூட்டிணைந்த திட்டத்தின்படி செயலாற்றலை பூர்த்தியாக்காமை தொடர்பான விடயங்களை பரீட்சிப்தற்கு முடியாதிருந்தது.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் முக்கியமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு ஆக்கபூர்வமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

### 4.5 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6 ஆம் அத்தியாயத்தின் 6.5.3 ஆம் பிரிவின்படி பாரளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை

**4.6 உள்ளகக் கணக்காய்வு**

(அ) உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்

(i) உரிய துறையில் தகுதிவாய்ந்த போதிய எண்ணிக்கையான உத்தியோகத்தர்களை ஒதுக்குவது அவசியமாக உள்ளது.முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2009 யூன் 09 ஆந் திகதிய உள்ளக கணக்காய்வு வழிகாட்டல்களின் 3 ஆவது பந்தியின்படி உள்ளக கணக்காய்வுப் பிரிவில் போதிய உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டிய போதிலும் ஒரு உத்தியோகத்தர் அதவாவது உதவி உள்ளகக் கணக்காய்வாளர் மாத்திரம் இப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தார்.

(ii) நிதி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின்படி, அரையாண்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டும். ஆனால் பல்கலைக்கழகமானது இந்த வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) முற்பணக் கொடுப்பனவுகளும் தீர்ப்பனவுகளும்
(ஈ) நூலக நிர்வாகம்

(உ) பதவியணியினர் கடன்கள்

(ஊ) ஏனைய கொடுப்பனவுகள்